

# ஸத் ஸம்ப்ரதாயம்

**प्रपदजितकूर्ममूर्मिल करुणं भर्मरुचिनिर्मथनदेहम् ।**
**श्रितवर्म मर्म शंभोः किञ्चन नर्म मम शर्म निर्मातु ॥**

ப்ரபத³ஜிதகூர்மமூர்மில கருணம்' ப⁴ர்மருசிநிர்மத²னதே³ஹம் |



ஶ்ரிதவர்ம மர்ம ஶம்போ⁴: கிஞ்சன நர்ம மம ஶர்ம நிர்மாது ||

ஆமை முதுகை வெல்கிற புறங்காலுள்ளது. அலைமோதுகிற கருணையுள்ளது, தங்க ஒளியைக் குலைக்கிற மேனிவண்ணம் கொண்டது, கவசமணிந்தது, சிவனது ஏதோ ஒரு ரஹஸ்யமானது, அது எனக்கு இதம் புரியட்டும். (ஸ்துதித்ரயீ )

## அருள் மொழிகள்

**சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாஸனம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு நான்கு தகுதிகள் தேவைப்படுகின்றன. அவை விவேகம் (பகுத்தறிதல்), வைராக்யம் (பற்றின்மை), ஸமாதி-ஷட்க-ஸம்பத்தி (மனவடக்கம் முதலிய ஆறு அருங்குணங்கள்) முமுக்ஷுத்வம் (ஸம்ஸாரத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற தீவிர ஆசை) என்பன.**

—ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

भवन्ति नम्राः तरवः फल उद्गमैः, नव अंबुभिः दूरविलंघिनो घनाः ।
अनुद्धताः सत्पुरुषाः समृद्धिभिः, स्वभाव एव एष परोपकारिणां ||


ப⁴வந்தி நம்ரா: தரவ: ப²ல உத்³க³மை:, நவ அம்பு³பி⁴: தூ³ரவிலங்கி⁴னோ க⁴னா: |
அனுத்³த⁴தா: ஸத்புருஷா: ஸம்ருத்³தி⁴பி⁴:, ஸ்வபா⁴வ ஏவ ஏஷ பரோபகாரிணாம்' ||

நிறைந்து காய்த்துத் தழைத்த மரங்கள் காணப்படுகின்றன. நீர் நிரம்பி ஆகாசத்தில் கூடும் தாழ்ந்து தவழும் மேகங்களும் உள்ளன. ஸகல ஸம்பத்துகள் இருந்தும் கர்வமேயில்லாத நல்லோர்களும் உலகில் உள்ளார்கள். இவ்வாறிருப்பது பரோபகாரம் உள்ளவர்களின் ஸ்வபாவமான (இயல்பான) குணம். ( பரோபகார பத்ததி: (பரோபகார இயல்பு)



# விதுர நீதி

एकसंपन्नमश्नाति वस्ते वासश्च शोभनम् ।
योऽसंविभज्य भृत्येभ्यः को नृशंसतरस्ततः ॥
ஏகஸம்பந்நமஶ்நாதி வஸ்தே வாஸஶ்ச ஶோப4னம் |
யோऽஸம்’விப4ஜ்ய ப்4ரு’த்யேப்4ய: கோ ந்ரு’ஶம்’ஸதரஸ்தத: ||



எவன் தன்னிடம் வேலை செய்கிறவர்களுக்குக் கொடாமல் நல்ல உணவு உட்கொள்கிறானோ, அதே போல் நல்ல ஆடைகளை தரித்துக் கொள்ளுகிறானோ, இவனுக்கு மேல் கடினமான மனமுடையவன் வேறு யார் இருக்க முடியும்?

एक हम्यान वा हन्यादिषुर्मुक्तो धनुष्मता ।
बुद्धिर्बुद्धिमतोत्सृष्टा हम्याद्राष्ट्रं राजकम् ॥
ஏக ஹம்யான வா ஹன்யாதி3ஷுர்முக்தோ த4னுஷ்மதா |
பு3த்3தி4ர்பு3த்3தி4மதோத்ஸ்ரு’ஷ்டா ஹம்யாத்3ராஷ்ட்ரம்’ ராஜகம் ||

வில்லாளியால் விடப்பட்ட அம்பானது ஒருவனைக் கொல்லும், அல்லது கொல்லாமல் விட்டாலும் விடும். புத்தி மானால் உபயோகிக்கப்பட்ட புத்தியானது அரசனுடன் கூடிய தேசத்தை அழித்துவிடும்.

एकं विपरलो हन्ति शस्त्रेणैका हन्यते ।
राष्ट्र सप्र हन्ति राजानं मन्त्रविप्लवः ।।
ஏகம்’ விபரலோ ஹந்தி ஶஸ்த்ரேணைகா ஹன்யதே |
ராஷ்ட்ர ஸப்ர ஹந்தி ராஜானம்’ மந்த்ரவிப்லவ: ||

விஷரஸமானது ஒருவனைக் கொல்லுகின்றது. அதே போல் ஆயுதத்தால் ஒருவன் கொல்லப்படுகிறான். ஆனால் அரசன் செய்த தவறான மந்திராலோசனையானது மக்களுடன் கூடிய அரசனையும் தேசத்தையும் அழிக்கும்.
(தொடரும்…..)



## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## ஸ்ரீ சாரதா பீடமும் ஆசார்ய பரம்பரையும்



சில சமயங்களில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற வகையில் நமக்கு சந்தேகம் ஏற்படலாம். சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்து தன் சந்தேகத்தைத் தவறில்லாமல் நிவர்த்தித்துக் கொள்ளும் திறமை ஒவ்வொருவனுக்கும் இருந்துவிட முடியாது. இத்தகைய நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று உபநிஷத்துக்கள் கூறியுள்ளன. 'சாஸ்திரங்களைப் படித்து உன் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் திறமை உனக்கு இல்லையானால், நீ பெரியோர்களின் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும்."
(ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

"பெரியோர்கள் என்றால் நல்ல அறிவாளிகளும் சாஸ்திரங்களை ஆராய யோக்யதையுள்ளவர்களுமேயாவார்கள். அவர்கள் கடைப்பிடித்த வழியில் நீயும் செல்லலாம். அவ்வழியே சென்றால் நீ சிரேயஸ்ஸை அடைவாய்" என்று உபநிஷதங்கள் கோஷிக்கின்றன. இந்நாளில் அநேகம் பேர்களுக்குச் சந்தேகங்கள் வருகின்றன. எல்லோருக்கும் சாஸ்திரங்களை ஆராய்ந்து சந்தேக நிவிருத்தி செய்துகொள்ளுதல் சாத்தியமாகாது. அந்நிலையில் முன்னோர்கள் சென்ற வழியையே சிறிதும் விசுவாசம் குறையாமல் பின்பற்ற வேண்டும். அதுவே நமக்கு சிரேயஸ்ஸைக் கொடுக்கும். "நம் முன்னோர்கள் அறிவற்றவர்கள்; நாம்தான் அறிவாளிகள்" என்று எண்ணிக் கொண்டிருந்தால் அதைவிட அறியாமை வேறொன்றும் இல்லை. நம் முன்னோர்கள் ஒன்றும் தீர்க்கமாக யோசனை செய்யாமல் நாம் செல்ல வேண்டிய வழியை வகுக்கவில்லை. தங்கள் அறிவு காட்டிய வழியில் தர்மத்தைப் பின்பற்றி அவர்கள் சிரேயஸ்ஸை அடைந்தார்கள். ஆகையால் நாமும் அவர்களைப் பின்பற்றி அவர்கள் கடைப்பிடித்த வழியிலேதான் செல்ல வேண்டும் என்ற தீர்மான புத்தியுடன் இருக்க வேண்டும்.



ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் குறிக்கோள் என்னவென்றால், தர்ம பிரச்சாரம் எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதே. நற்செய்கைகள் காலமுள்ளளவும் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதே அன்னாரின் கனவு. நாம் அறிந்த தத்துவ ஞானிகளுள் ஸ்ரீ சங்கரரைப்போல் உயர்ந்தவர் யாருமில்லை என்றால் அது மிகையாகாது, குறுகிய 32 வயதிற்குள் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரை தர்ம பிரச்சாரம் செய்தது மட்டுமில்லாமல். சதுராம்னாய பீடங்களையும் ஸ்தாபித்ததிலிருந்து, சங்கரரின் ஒப்பில்லா அறிவாற்றலும் தீர்க்கதரிசனமும் வெளிப்படவில்லையா? அந்த அறிவாற்றலின் விளைவுதான் புனித சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்ட தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடம். பிரம்மவித்யா ஸ்வரூபிணியும் எல்லா அறிவுக்கும் உறைவிடமுமான ஜகந்மாதா ஸ்ரீ சாரதாம்பிகையை சிருங்கேரியில் சங்கரர் பிரதிஷ்டை செய்தார். எந்த சிரேஷ்டமான முகூர்த்தத்தில் இந்த பீடத்தை நிறுவினார் என்று அறிய நமக்கு ஆற்றல் இல்லை. அவிச்சின்ன பரம்பரையாக இப்பீடத்தின் ஆசார்யர்கள் வந்ததிலிருந்தே அந்த வேளையின் உயர்வு தெரிகிறது. இம்மடத்துக்கு எவ்வளவோ கஷ்ட நிலைமைகளும் இக்கட்டுகளும் வந்திருக்கின்றன. இந்த கால கட்டங்களிலும் அவிச்சின்னமான குருபரம்பரை பாதிக்கப்படாமல் தடங்கலில்லாமல் நம் காலம் வரை வந்திருக்கிறது.

சிருங்கேரி மடத்தின் சரித்திரத்தில் கர்நாடக சாம்ராஜ்ய பிரதிஷ்டாபனாசார்யர் என்று புகழ்பெற்ற ஸ்ரீ வித்யாரண்யரின் காலம் ஒரு பொற்காலம் என்பதை யார்தான் அறியார்? பலர் என்னிடம், "விரக்தியை மேற்கொண்ட ஒரு ஸந்யாசிக்கு இம்மாதிரி பட்டாபிஷேகம் நடப்பதெல்லாம் முரணாக இல்லையா? இம்மாதிரி சடங்குகள் லோக விஷயங்களில் மூழ்கியுள்ளவர்களுக்குப் பொருந்துமேயல்லாது அதற்கு நேர்மாறான முற்றும் துறந்த ஸந்யாசிக்குப் பொருந்துமா?" என்று கேட்டார்கள்.

உண்மையில், ஸ்ரீ சங்கரபகவத்பாதர் காலத்திலும் அதற்குப் பின்னும் அரசுச் சின்னங்களோ, பட்டாபிஷேகம் வைபவங்களோ சிருங்கேரி ஆசார்யர்களுக்கு இருந்ததில்லை. போன்ற ஸ்ரீ சங்கரபகவத்பாதர் காலம் முதல் ஸ்ரீ வித்யாரண்யர் காலம் வரை நம் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதிலும் ஞானத்தை நாடி வந்தவர்களுக்கு அதற்குரிய வழிகாட்டுவதிலுமே ஈடுபட்டு இருந்தார்கள். கர்நாடக சிம்மாஸன பிரதிஷ்டாபனாசார்யரான ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளும்கூட மஹாதபஸ்வியாகவே இருந்தார். நாம் இதை மனதில் கொள்ள வேண்டும். மற்ற ஆசார்யர்கள் ஏன் வித்யாரண்ய ஸ்வாமிகளைப் போல் வெளி இராஜ்ஜிய விவகாரங்களில் ஈடுபடவில்லை என்று பலர் கேட்கிறார்கள். ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள்கூட வெளி விவகாரங்களில் முழுவதும் ஈடுபட்டார் என்பதற்கு ஆதாரமில்லை.

(தொடரும்....)



# மேதா ஸூக்தம்

**(தைத்திரீய ஆரண்யகம், 4.10.41-44)**
**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**

உள்ளுணர்வை வேண்டிப் பிரார்த்திக்கிறது இந்த ஸூக்தம். இந்த உள்ளுணர்வு மேதா தேவியாக உருவகிக்கப்படுகிறாள். அவளது ஒளி சூரியனின் கிரணங்கள்போல் எங்கும் பரந்துள்ளதாகக் காண்கிறது அதர்வண வேதம் (6.108.1–5) காணப்படுகின்றது .

கல்வி, விஞ்ஞானம், மதம், ஆன்மீகம் என்று எந்தத் துறையானாலும் இந்த உள்ளுணர்வு விழிக்கப் பெற்றவர்களே படைப்பாளிகளாக இருந்தார்கள். பெரிதாக எதையும் சாதிக்க நினைப்பவர்களுக்கு இந்த உள்ளுணர்வின் விழிப்பு, மேதா தேவியின் அருள் மிகவும் இன்றியமையாதது.



1. எங்கும் நிறைந்தவளும், மங்கலத்தைத் தருபவளும், நன்மை செய்பவளும், நம்மிடம் மகிழ்ச்சி கொண்டவளும், அறிவின் தேவியும் ஆகிய கலைமகள் நம்மிடம் வருவாளாக! தேவி, நீ வருமுன்பு பயனற்ற பேச்சுகளில் மகிழ்ந்திருந்த நாங்கள் உனது ஆசிகளால் நல்லறிவு பெற்று, வீரம் நிறைந்த மக்களுடனும் சீடர்களுடனும் மேலான உண்மைகளைப் பேசும் திறன் பெற்றோம்.

2. தேவீ ! உன் அருள் பெற்றவன் ரிஷி ஆகிறான்; பிரம்ம ஞானியாகிறான்; செல்வம் பெறுகிறான்; சிறந்த பல்வேறு ஐசுவரியங்களை அடைகிறான். அத்தகைய கலைமகளே, எங்களுக்குச் செல்வங்களை அருள்வாய்!

(ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ஹ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், , சிருங்கேரியில்)

3. இந்திரன் எனக்கு உள்ளுணர்வைத் தரட்டும்! சரஸ்வதி தேவி எனக்கு புத்தியை அருளட்டும்! தாமரை மாலைகள் அணிந்த அச்வினி குமாரர்கள் இருவரும் எனக்கு புத்தியைத் தரட்டும்!


4. எந்த உள்ளுணர்வு அப்சரப் பெண்களிடம் உள்ளதோ, எந்த மன ஆற்றல் கந்தர்வர்களிடம் உள்ளதோ, எந்த உள்ளுணர்வு தெய்வீக வேத ஞானமாக வெளிப்பட்டுள்ளதோ, நறுமணம்போல் பரவுகிறதோ, அந்த உள்ளுணர்வு என்னில் அருளை நிறைக்கட்டும்!

(தொடரும்….)



# என்றும் புதியவர்
## ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

**முன்னுரை**



நான்காவது இயலில் "ஔதார்யம்" என்ற சொல்லிற்குத் "தாராள குணம்", "பெருந்தன்மை", "மேன்மை", "பரந்த மனம்" என்று பொருள் கூறுவோம். முதலில் தாராள குணம் என்று பொருள் கொண்டு, தகுந்தவர்களுக்குத் தகுந்த சமயத்தில் ஆசார்யாள் செய்த பொருளுதவி, உடலினால் செய்த உதவி ஆகியவற்றைப்

(ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் (பூர்வாஸ்ரம சமயத்தில் குருநாதருடன் சிருங்கேரியில் இருக்கும் போது எடுத்த படம்)

பற்றிப் பேசுவோம். அதன் பின், கொடுக்கும் போது தம்மை முன்னிறுத்தாமல் கொடுப்பதே பெருந்தன்மை என்பதைக் கூறி ஆசார்யாளின் பெருந்தன்மையை எடுத்துக்காட்டும் சில நிகழ்வுகளைக் கூறுவோம். “நான்” என்ற எண்ணம் ஒடுங்கியுள்ளவர்களுக்கு இயல்பாகவே பெருந் தன்மை இருக்கும் என்பதையும் இங்கே விவரிப்போம். கடைசியாக இந்த இயலில் ஆசார்யாளின் பரந்த மனப்பான்மை பற்றிக் கூறுவோம். ஔதார்யத்திற்கும் உதாரவாதத்திற்கும் (Liberalism) உள்ள வேறு பாட்டை இது எப்படி எடுத்துக்காட்டுகிறது என்பதையும் இங்கே கூறுவோம்.

ஐந்தாவது இயலில் "க்ஷமை" என்ற சொல்லிற்குப் "பொறுமை" "மன்னிக்கும் தன்மை", “சகிப்புத் தன்மை" ஆகிய வெவ்வேறு பொருள் கூறுவோம். தமது சொந்த விஷயத்தில் மற்றவர் செய்த இடர்ப் பாடுகளைப் பொருட்படுத்தாமல், ஆசார்யாள் பொறுமையையே வெளிப்படுத்தினார் என்பதையும். அதற்கு மாறாக ஒரு மடாதிபதியாக அந்நிறுவனத்தின் பணிகளைச் சரியாகச் செய்யாதவர் விஷயத்தில் கண்டிப்பையும் மன்னிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தினார் என்பதை இந்த இயலில்



பார்ப்போம். இறுதியாக, வேதாந்த சாஸ்திரத்தில் “க்ஷமை”, “திதிக்ஷா” ஆகிய குணங்களைப் பற்றி என்ன கூறுகிறது என்பதையும் ஆசார்யாளின் ஆளுமையில் இவை எப்படி வெளிப்பட்டன என்பதைக் கூறுவோம்.

கடைசி இயலில் ஆசார்யாளுக்கு இடப்பட்ட பெயர் அவருக்கு எப்படிப் பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம். மேலும், நாம் இந்நூலில் கருதுதலுக்காக எடுத்துள்ள சுலோகத்தின் இரண்டாவது அடியில், அதாவது,

सदाऽभिपूर्वद्यागुरुभजे

என்ற வரியில், இந்நூலின் மையக் கருத்து பொதிந்துள்ளதைப் பற்றிக் கூறுவோம்.

## 1. பகுத்தறிவு (விவேகம்)

சுலோகத்தில் முதலாவதாகக் கூறப்படும் குணம் "விவேகம்". "விவேகம்" என்ற சொல் சில சமயங்களில் "அறிவு" என்ற பொருள்பட வந்தாலும், அச்சொல்லிற்கு "ஒன்றை மற்றொன்றுடன் பாகுபடுத்தி அறிவது' என்பதே முழுமையான பொருள். உதாரணமாகத் தருணம் தெரியாமல் ஒரு செயலைச் செய்பவனை “என்ன விவேகம் இல்லாமல் நடந்து கொள்கிறாயே" என்ற நாம் கடிந்து கூறுகிறோம்; அதாவது, இவனுக்கு எந்த சமயத்தில் எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யக்கூடாது என்பது தெரியவில்லை என்ற பொருள் இங்கே தொனிக்கிறது. இதைப் போலவே "இது சரி, அது தவறு; “இது செய்யத் தக்கது, அது செய்யத் தகாதது"; "இது உண்மை, அது பொய்" என்று பாகுபடுத்தி, அதாவது பகுத்து அறிவதே. விவேகம் என்று கூறப்படுகிறது. இதையே "பகுத்தறிவு” என்றும் கூறுகிறோம். இக்காலத்தில் நாத்திகர்கள் தம்மைப் "பகுத்தறிவுவாதிகள்" என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் நாமும் பகுத்தறிவு வாதிகள் தாம். நமக்கும் அவர்களுக்கும் ஒரே ஒரு வித்தியாசம் தான் இருக்கிறது. நாம் எதை உண்மை என்கிறோமோ அதை அவர்கள் பொய் என்கிறார்கள்; அதே போல். பொய் என்று நாம் எதைக் கூறுவோமோ. அதை அவர்கள் மெய் என்கிறார்கள். இந்த வேறுபாடு எப்படியிருந்தாலும், பகுத்தறிவு என்ற குணத்தை இரு தரப்பினரும் போற்றுகின்றனர்.

**எது சரி, எது தவறு என்று பகுத்தறிவது விவேகம்**

முதலில், விவேகம் என்பதற்கு 'இது சரி, அது தவறு என்று பகுத்தறியும் திறன் என்று பொருள் கொண்டு, இக்குணம் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைப் பார்ப்போம். ஆசார்யாள் துறவறம் பெறுவதற்கு ஒரு நாள் முன்னர் நடந்த சம்பவம் இது:

(தொடரும் …) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

ஒரு தேசத்தில் ஒரு அரசன் இருந்து வந்தான். கூடிய மட்டும் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகவே ராஜ்ய பாரத்தை வகித்து வந்தான். தான் நடந்து வரும் முறை ப்ரஜைகளுக்கு த்ருப்திகரமாயிருக்கிறதாவென்று அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. தன்னுடைய மந்திரியைக் கூப்பிட்டு "நம் ப்ரஜைகள் நம்மிடம் என்ன மனோபாவத்துடன் இருந்து வருகிறார்களென்று தெரிந்து எனக்குச் சொல்ல வேண்டும்" என்று சொன்னான். அதற்கு மந்திரி "நான் அறிந்து சொல்வதைவிடத் தாங்களே நேரில் அறிந்து கொள்வதுதான் நல்லது. தங்களுக்கு ஸௌகர்யப்பட்ட தினத்தில் மாறுவேஷத்துடன் என்னுடன் ஊருக்குள் வந்தால் தெரிந்துகொள்ளலாம்" என்றார். "அப்படியே ஆகட்டும்" என்று அரசனும் ஸம்மதித்து ஒரு நாள் இருவரும் மாறுவேஷம் தரித்துக்கொண்டு பகல் நடு மத்தியான வேளையில் புறப்பட்டு ஊர் பக்கத்தில் இருந்த நதிக்கரையில் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

அந்த ஸமயம் காட்டுக்குப் போய் ஒரு கிழவன். அக்கரையிலிருந்த அங்கு கிடக்கும் சுள்ளிவிறகுகளை சேகரித்துக் கட்டுக்கட்டாக கட்டிக்கொண்டு இக்கரைக்கு வந்து அதை விற்று வரும் பணத்தைக்கொண்டு அன்றைய தினம் சாப்பாட்டை நடத்திவிடலாமென்ற எண்ணத்துடன், தலையில் விறகுக்கட்டைச் சுமந்துகொண்டு அந்த வெய்யிலில் ஆற்றில் நன்கு சுட்டுக்கொண்டிருக்கும் மணலில் தள்ளாடிக்கொண்டு வந்து கொண்டிருந்தான். இதை அரசன் பார்த்தான். “நான் என்ன ராஜ்ய நிர்வாஹம் செய்கிறேன்? இக்கிழவன் இவ்வளவு சிரமப்பட்டு காலக்ஷேபம் பண்ணும் இருக்கிறது ? ஐயோ பாவம்! இனி இதுமாதிரி இவன் கஷ்டப்படாமல் செய்துகொடுக்கவேண்டும்" என்று அரசன் நினைத்தான். அந்த ஸமயம் அந்தக் கிழவனும் ஸமீபத்தில் வந்தவுடன் மந்திரி அவனைப்பார்த்து 'கிழவரே, நம் ஊர் அரசன் காலமாகிவிட்டாமே. உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார். இதைக்கேட்டவுடன் அந்தக் கிழவன் "நம் மஹாராஜாவா இறந்துவிட்டார்? மஹாதார்மிகராச்சே, அவரைப்போல் இனி யாரைப் பார்க்க முடியும்?" என்று சொல்லிக்கொண்டே கண்ணில் நீர்வடித்துக் கொண்டு பிரக்ஞையற்று கீழே விழுந்துவிட்டான். உடனே மந்திரி ஸமீபத்தில் போய் அவனை ஆசுவாசம் செய்து "ஏதோ காதில் பட்டதைச் சொன்னேன். இது



பிசகு என்று தெரிகிறது. மஹாராஜா ஸௌக்கியமாகவே இருக்கிறார்" என்றார். "அப்படிச் சொல்லுங்கள், அவர் வெகு நாள் தீர்காயுஸாயிருந்து நம்மையெல்லாம் நன்கு எப்பொழுதும் போல் பரிபாலித்து வரவேண்டும்" என்று கிழவன் வெகு அன்புடன் சொன்னான். அரசன் மந்திரியைப் பார்த்து "எதற்காக நான் இறந்துவிட்டாக அவனிடம் சொன்னீர்?" என்று கேட்டதற்கு "பின்னால் சொல்கிறேன்" என்று மாத்திரம் பதில் சொன்னார்.

அதன்பிறகு ஒரு வீதிவழியாய் போய்க்கொண்டிருக்கையில் அங்கே ஒரு தயிர்க்காரி யௌவனப் பருவத்தில் இருப்பவள் தலையில் தயிர்க்கூடையை வைத்துக்கொண்டு உல்லாசமாகப் பாடிக்கொண்டு வருவதை அரசன் பார்த்தான். "நம் ராஜ்யத்தில் இப்படியும் மானம் கெட்டு செருக்குடன் பெண்கள் இருக்கிறார்களா ? அவர்களை நன்கு கண்டித்தால்தான் ராஜ்யம் உருப்படும்' என்று நினைத்து வெகுகோபக்களையுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் எதையும் கவனிக்காமல் அன்னநடை நடந்து மெள்ள வந்து கொண்டிருக்கும்போது மந்திரி அவளிடம் போய் "நம் ஊர் அரசன் இறந்து விட்டாராமே, உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அதைக் கொஞ்சம் கூட லக்ஷியம் செய்யாமல் "எவன் செத்தால் எனக்கென்ன? என் தயிர் என்றைக்கும் விற்கும்" என்று வெகு உதாஸீனமாய் பதில் சொன்னாள். அதன் பேரில் மந்திரி "நான் விசாரித்ததில் அப்படி ஒன்றுமில்லை, மஹாராஜா ஸௌக்கியமாக இருப்பதாகத் தெரிகிறது" என்றார். அதற்கும் அவள் "எனக்கு இதுதான் விசாரம். யார் எப்படியிருந்தால் எனக்கென்ன?" என்றே பதில் சொல்லி விட்டாள். இப்பொழுதும் அரசன் "ஏன் இப்படிச் சொன்னீர்?" என்று கேட்டதற்கும் "அரண்மனைக்குத் திரும்பிப் போனபிறகு சொல்கிறேன்" என்றே பதில் சொன்னார்.

பிறகு அரண்மனைக்குப் போன பிற்பாடு அரசனிடம் மந்திரி சொன்னதாவது "அந்தக் கிழவன் தங்களிடம் அபிமானம் காட்டினதற்குக் காரணம் தாங்கள் அவனுடைய சிரமதசையைப் பார்த்து அவன் விஷயமாய்த் தங்கள் மனதில் அனுதாபம் தோன்றியிருக்கும். அந்தத் தயிர்க்காரியிடம் தங்களுக்கு வெறுப்பும் ஏற்பட்டிருந்திருக்கும். இல்லையானால் அவ்வளவு உதாஸீனமாய் அவள் பேசியிருக்கமாட்டாள். அவ்விருவர் மனத்திலும் தங்களைப் பற்றி ஏற்பட்ட மனோபாவம் வெளிப்பட வேண்டுமென்பதற்காகவேதான் நான் தாங்கள் இறந்து விட்டதாகச் சொன்னேன். தங்களுக்கு அவர்கள் விஷயமாக ஏற்பட்ட மனோபாவத்தை அநுஸரித்தே அவர்கள் மனோபாவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுதான் அங்கே பிரதிபலிக்கும். ஆகையால் பிரஜைகள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்களென்ற கவலையே வேண்டியதில்லை. நம் மனம் சுத்தமாய் அவர்களுடைய ஹிதத்தையே நாடினதாய் இருக்கும் பக்ஷத்தில் அவர்களும் நம்மிடத்தில் அபிமானத்துடனிருப்பார்கள்." இவ்விதம் மந்திரி விஷயத்தை எடுத்துச் சொன்னதும் அரசனும் மிகவும் நியாயமென்று ஒப்புக்கொண்டு அதுமுதல் முன்னைவிட ஊக்கமாகப் பிரஜைகளின் பரிபாலனத்தில் ஈடுபட்டுவந்தான். (தொடரும் ...) மிக்க நன்றி : ஶ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# श्री शारदास्तोत्राणि

## ஶ்ரீ ஶாரதா³ஸ்தோத்ராணி

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ சந்திர சேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

### श्री शारदागीतम् - १

**ஶ்ரீசாரதா கீதம் - 1**

विधिमुखाम्भोजहंसि शारदे रक्ष्याः कृपया ।
कमलाक्ष मुख्यामर पूजितपादाम्भोजे ।
कमला प्रदान दक्षे नमतां जनानां त्वरया ॥
விதி⁴முகா²ம்போ⁴ஜஹம்’ஸி ஶாரதே³ ரக்ஷ்யா꞉ க்ரு’பயா |
கமலாக்ஷ முக்²யாமர பூஜிதபாதா³ம்போ⁴ஜே |
கமலா ப்ரதா³ன த³க்ஷே நமதாம்’ ஜனானாம்’ த்வரயா ||

பிரும்மாவின் முகத்தாமரையில் அன்னப் பேடாக விளையாடுகிற சாரதையே! ஹரி முதலான தேவர்களால் சரண கமலங்களில் வழிபடப் பெறுபவளே ! வணங்குகிற மக்களுக்கு விரைவில் லக்ஷ்மியை வழங்க வல்லவளே ! உன்னால் நாங்கள் கருணையால் காக்கப் பெற வேண்டியவர்கள். (1)

मुखधूत चन्द्राम्भोजे मखजापतर्प्य बुधैः ।
सुखज्ञान सत्तारूपे सुखमाशु दत्वाऽ(रक्ष्याः कृपया)नन्तम्।
முக²தூ⁴த சந்த்³ராம்போ⁴ஜே மக²ஜாபதர்ப்ய பு³தை⁴꞉ |
ஸுக²ஜ்ஞான ஸத்தாரூபே ஸுக²மாஶு த³த்த்வா(அ)(ரக்ஷ்யா꞉ க்ரு’பயா)நந்தம்||

முக அழகால் சந்திரனையும், தாமரையையும் வென்றவளே! பேரறிஞர்களது வேள்விகளாலும் ஜபத்தாலும் திருப்தி பெறுபவளே ! பேரானந்தமும் பேரறிவும் பேரிருக்கையும் வடிவானவளே ! எல்லையற்ற ஆனந்தமளித்து நாங்கள் காப்பற்றத் தக்கவர்கள்.(2)

कच जित नीलाम्भोदे कुचधूतचक्रे शिवे ।
अचलेन मनसाप्ये रचनावन स्वातन्त्र्ये ॥
கச ஜித நீலாம்போ⁴தே³ குசதூ⁴தசக்ரே ஶிவே |
அசலேன மனஸாப்யே ரசனாவன ஸ்வாதந்த்ர்யே ||

கேசக் கற்றையால் கருமேகத்தை வென்றவளே ! மார்பகத்தால் சக்ரவாகப் பறவைகளை வென்றவளே ! மங்களமானவளே ! சலிக்காத உள்ளத்தால் பெறப் பெறுபவளே ! படைப்பதிலும் காப்பதிலும் தன்னியல்பாக இயங்குபவளே! உன்னால் நாங்கள் காப்பாற்றத் தக்கவர்கள். (3)



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் 2

**நாரத - ஸனத்குமாரர் உரையாடல்; சோமதத்தன் சாபம் நீங்குதல்.**

நாரதர் கூறுகிறார்:- அந்த அந்தணோத்தமர், அரசுகள் வாயிலிருந்து புகழ்பெற்ற இராமாயணம் என்ற சொல்லையும், இராமனுடைய அளவிடற்கரிய பெருமையையும் கேட்டு மிகவும் வியப்படைந்தார். இராம நாமத்தில் திளைத்திருப்பவரும், கருணை மிக்கவருமான அவ்வந்தணர், சுதாஸன் என்ற அந்த அரக்கனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

அந்தணர் கூறுகிறார்— அரக்கர் தலைவனே! பெரும்பேறு பெற்றவனே! உன்னுடைய அறிவு தெளிவடைந்துவிட்டது. இராமபக்தியில் திளைத்திருப்பவனே! தற்போது நடந்துகொண்டிருக்கும் கார்த்திகை மாத வளர்பிறையில் இராமாயண மகாகாவியத்தைக் கேள்: இராமபிரானின் பெருமையையும் கேட்பாயாக. இராமத் தியானத்தில் ஈடுபட்டிருப்பவனை யார். என்னதான் செய்ய முடியும்? எந்த தெய்வம் அல்லது கோள், துன்பத்தைக் கொடுக்க முடியும்? ஏனென்றால், முப்பெரும் பொருளான பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர், இராம பக்தியில் ஈடுபட்டிருக்கும் அடியார் இருக்கும் இடத்தில் வந்து தங்கிவிடுகிறார்கள்.



அந்த இடத்தில் தேவர்களும், சித்தர்களும், இராமாயணத்தில் மூழ்கி ஆனந்திப்பவர்களும் வந்து சேர்கிறார்கள். அதனால், கார்த்திகை வளர்பிறையில் இராமசரிதத்தைத் கேள். எனவே, நீ மிகுந்த கவனத்துடன் 'ஒன்பது நாட்கள் கேட்பது' என்ற விதிப்படி கேட்பாயாக. இவ்வாறு கூறிவிட்டு, கர்க முனிவர் இராமாயணத்தை உபதேசித்தருளினார்.



கதையைக் கேட்டவுடனேயே, அவனிடமிருந்த அரக்கத்தனம் விலகிப் போயிற்று அரக்கத்தன்மையை விடுத்து, தேவதைகளுக்கு நிகரான உயர்ந்த தன்மையை அடைந்தான்.

கோடி சூரியனைப் போன்ற பேரொளி, நாராயணனுக்கு நிகரான கண்கவர் தோற்றம். சங்கு-சக்கரம்-கதையைக் கைகளில் தாங்கியவனாக அவன். விஷ்ணுவின் இருப்பிடத்தை அடைந்தான் (சாரூப்யத்தை அடைந்தான்). அந்த அந்தணன், கர்க முனிவரை வெகுவாகப் போற்றிவிட்டு வைகுண்டத்தை அடைந்தான்.

நாரதர் கூறுகிறார்- வேதவிற்பன்னர்களே! இராமாயண கதை என்ற அமுதத்தைப் இராமாயணத்தை எந்தக் காலத்தில் கேட்டாலும் நற்பயன் விளையும் என்றாலும், கார்த்திகை மாதத்தில் கேட்டால் அதிகமாக பயன் கிடைக்கும்.

கோடிக்கணக்கான மகாபாதகங்களைச் செய்தவனாக இருந்தாலும், இராமாயணத்தை நினைத்தமாத்திரத்திலேயே, எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு உத்தமகதியை மனிதன் அடைகிறான். இராமாயணம் என்ற பெயரை, எப்போது ஒருவன் ஒரு தடவையேனும் சொல்கிறானோ. அப்போதே பாவங்களிலிருந்து விடுபடுகிறான்; காலக்கிரமத்தில் விஷ்ணுலோகத்தை அடைகிறான். எப்போதும் மிகுந்த பக்தியுடன் இராமாயணத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் கங்கை நதியில் நீராடினால் கிடைக்கும் புண்ணியத்தைப் போன்ற நூறு பங்குப் பயனைப் பெறுவார்கள்.

### அத்தியாயம் : மூன்று
### மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி-சத்தியவதியின் முற்பிறவி வரலாறு

சனத்குமாரர் கேட்கிறார்- தேவரிஷி நாரதரே! இந்த இதிகாசமானது தங்களால் கூறப்பட்டது. இராமாயணத்தின் பெருமைகளை, இன்னும் விரிவாக மீண்டும் எடுத்துக் கூறுங்கள்.

(கார்த்திகை மாதத்தில் இராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் ஏற்படும் நற்பயன்களை எடுத்துக் கூறினீர்கள்.) தாங்கள் மனமுவந்து, மற்ற மாதங்களில் இராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும்) ஏற்படும் மகிமைகளைக் கூறுங்கள். முனிவரே தங்கள் சொற்களாகிற அமுதத்தைப் பருகும் யாருக்குத்தான் பேரானந்தம் உண்டாகாது?
(தொடரும் …..)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்